முருகப்பெருமான் துணை

**மகான் வராகிமிகி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**06.11.2021**, சனிக்கிழமை

1. தவசியே கலியிடர் வெல்லவந்த
தணிகாசலனின் அவதாரமே
அவனியோர் உன் திருவடி பணிய
அழியாமை பெறுவர் என்று கூறி
2. கூறியே பிலவ துலை திங்கள்
குறையிலா இருபான் திகதி காரிவாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 20ம் நாள், 06.11.2021 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் வராகிமிகி யானும்
துல்லிய ஆசிதனை உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் திருவடி
உயிர்காக்கும் ஞானத்திருவடியாக
பேருலகில் மகா சக்தியாக இருக்க
பேதமற உலகோர் வணங்கிவர
4. வணங்கிவர ஞான பலமுடன்
வரமென பலசூட்சும சக்திகளும்
இணங்கியே  ஆற்றலாக வந்து
இணைந்து மக்களிடை மாற்றம்
5. மாற்றம் உலகையே மாற்றும்படி
மகத்துவமிக்க வண்ணம் தேறி
ஆற்றல்பட ஞான வழிகளை
ஆறுமுகனார் வழிபாடு வகைசெய்து
6. செய்துமே அரங்கன் அவதாரம்
செகமெங்கும் அறியப்படவே
மெய்ஞானவான்கள் எனும்
மேலான படைகள் பெருகி
7. பெருகியே ஞானத்தலைமையும்
பெருமைமிக்க ஞான ஆட்சியும்
தரும லோகமாகவும் மாற்றம் இனிதே
தவராஜன் அருளால் நடக்கும்
8. நடக்கவே நடப்பின் துன்பம்
நச்சுக்கிருமி பேரிடரும் கூட
இடராகத் தொடரா வண்ணம்
எங்கும் உயிர்பலி பெருகா வண்ணம்

9. வண்ணமுடன் பாதுகாப்பும் பெருக
வையகம் இயல்புநிலை அடைய
எண்ணம் வழி ஆளுமை சக்திகள்
இயம்பிடுவேன் அரங்கஞானி காட்டும்

10. காட்டும் ஜீவதயவு நெறியை
கட்டாயச் சட்டமாக்கி செயல்பட
வாட்டமான உயிர்க்கொலை நீக்கி
வள்ளல் நெறியை மக்களும் பின்பற்ற

11. பின்பற்ற வழிவகை செய்திட
பேராண்மை ஞானவழியாக உலகம்
இன்பமுற கண்டு பேரழிவை வெல்லும்
இயம்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–